



க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான,

‘‘தேம்பாவணி - காட்சிப்படலம்’’






தமிழ்





தொகுப்பு..

ஆசிரியர்: திரு. இ. அநூஷன் [National Dip.in.Teach]

(தொடர்புகளுக்கு 077-4323124)

www.tamil.lk



க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான

வீரமாமுனிவரின் "தேம்பாவணி - காட்சிப்படலம்"

பாரதி படிப்பகம்



தேம்பாவணி.

தேம்பாவணி என்னும் நூல் **இயேசு கிறிஸ்துவின் வளர்ப்பு தந்தையான புனித யோசேப்பு மீது** இயற்றப்பட்ட முதற் பெரும் செய்யுள் வகை நூலாகும். இந்நூல் **இத்தாலிய நாட்டவரான வீரமாமுனிவர் (1680 - 1742) அவர்கள் தமிழில் திறம்பட ஆக்கிய நூல்** எனப் புகழப்படுகிறது. **கிறிஸ்தவ சமயத்தின் சுருக்கமென்றே இந்நூலை அறிஞர்கள்** மதிப்பிடுகின்றனர்.

இத்தமிழ்க் காப்பியம் **பிறமொழி நூல் ஒன்றில் வருகின்ற செய்திகளைத் தழுவி, தமிழிழ் நெறிக்கேற்ப எழுதப்பட்டதாகும். அதாவது, ஸ்பானிய நாட்டு ஆகிருத நகரில் வாழ்ந்த ஆகிர்த மரியாள் (María de Ágreda)** என்னும் **கன்னி மறைபொருளான இறைநகரம் (Mystical City of God)** என்னும் நூலை, **கன்னி மரியாவின் ஆணைப்படி எழுதியதாகக்** கூறியுள்ளார். அந்த நூலில் இயேசுவின் வளர்ப்புத் தந்தையான யோசேப்பு பற்றிய செய்திகளும் உண்டு . **ஆகிர்த மரியின் அந்நூலைத் தழுவி, தமிழ் மரபுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஏற்ப யோசேப்பின் வரலாற்றை** இயற்றியிருக்கிறார் வீரமாமுனிவர்.

தேம்பா அணி + எனப் பிரித்து **வாடாத மாலை** என்றும், **தேன் அணி + பா +** எனப் பிரித்துத் **தேன் போன்ற இனிய பாடல்களின் மாலை** என்றும் இதற்குப் பொருள் உண்டு .**இயேசு நாதரை வளர்த்த தந்தையாகிய சூசையப்பரைத் தலைவராகக் கொண்டு இது பாடப்பட்டது .சூசையப்பருக்குத் தேம்பாவணி எனப் பெயரிட்டு இந்நூலில் பாடியுள்ளார்.**

"தேம்பாவணி" **கி.பி. 1726 ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் பலத்த எதிர்புகளுக்கிடையில் அரங்கேற்றப்பட்டது.** பல புலவர்களின் அடுக்கடுக்கான கேள்விகளுக்குச் சளைக்காமல் பதிலளித்த வீரமாமுனிவரிடம் தமிழ்ப் புலவர்கள், **"எல்லாம் தெரியுமெனக் கூறும் பெஸ்கி அவர்களே! வானத்தில் எத்தனை நட்சத்திரம் இருக்கிறது எனக் கூற முடியுமா?"** என நையாண்டியாகக் கேட்டார்கள். பதட்டமின்றி **"முப்பது மூன்று கோடி, முப்பதிமூன்று லட்டத்து, முப்பதிமூவாயிரத்து, முன்னூற்றிமுப்பதிமூன்று நட்சத்திரங்கள் சந்தேகமிருந்தால் எண்ணிப்பாருங்கள்"** என்றதும், சபையில் சிரிப்பொலி எழும்பிப் பலர் முனிவரைப் பாராட்டினார்கள். **"தேம்பாவணியின் சிறப்பைப் பாராட்டி மதுரைத் தமிழ்ச்சங்கம்" பெஸ்கிப் பாதிரியாருக்கு ராஜரிஷி என்ற பட்டம்** அளித்து சிறப்பித்தது.

தேம்பாவணி **மூன்று காண்டங்களைக்** கொண்டது. **ஒவ்வொன்றிலும் 12 படலமாக 36 படலங்கள்** உள்ளன. மொத்தம் **3,615 விருத்தப் பாக்கள் 90 சந்த வகைகளுடன் பாடப் பெற்றது.**

தேம்பாவணி ஆசிரியர், வெளி நாட்டவரே ஆயினும், காப்பியக் கதைத் தலைவர் சூசை வாழ்ந்ததும் தமிழ் மண்ணில் இல்லை எனினும், காப்பியம் முழுக்கத் தமிழ் மணம் கமழ்வதாக, தமிழ்ப் பண்பாட்டில் தோய்ந்ததாகவே படைக்கப் பெற்றுள்ளமைக்குப் பல சான்றுகள் கூறலாம்.

www.ikeda.lk

பிற தமிழ்க் காப்பியங்களைப் போலவே, **சீரிய உலகம் மூன்றும்** என மங்கலச் சொற்களைப் பெய்தே, தொடங்குகிறார் ஆசிரியர் .**இறைவனை வணங்க முற்படும் போது, மேனாடுகளில் வழங்கும் கிறித்தவ மரபுகளைச் சாராது, தமிழ் மரபையே சார்ந்து, இறைவனது பாதங்களையே முதலில் வணங்குவதையும், இறைவனது பாதங்களை மலராகக் காண்பதையும் இங்குக் காண்கிறோம்**இறைவனுக்கு வாகனங்களை . அத்துடன் .உரிமை செய்து பாடுவன தமிழகச் சமயங்கள், இறைவனுக்குரிய கொடிகளாகச் சிலவற்றைக் குறிப்பதும் இங்குள்ள சமய மரபுஇதனைப் பின்பற்றி வீரம .ாமுனிவரும் **திருமகன் இயேசுவை மேக வாகனத்தில் வருபவராகவும், அவரது முன்னோரான தாவீது அரசனைச் சிங்கக் கொடியோன்** என்றும் பாடுகிறார்.



மேலும் **இறைவனது திருமேனிக்கு வண்ணம் குறித்துப் பாடுவது (நிறம்), இறைவனைத் தரையில் தலைபட வணங்குவது, கை கூப்பி வணங்குவது, மலர்கள் தூவி வழிபாடு செய்வது, பல்வகை விளக்குகளை ஆலயத்தில் ஏற்றுவது, தேர்த்திருவிழா காண்பது** முதலிய பல தமிழ்ச் சமய மரபுகளைத் தம் காப்பியத்தில் வீரமாமுனிவர் இணைத்துள்ளதைக் காண்கிறோம் .**ஓரிரு இடங்களில் தாம் கூறவரும் செய்திகளுக்கு உவமையாகத் தமிழ்நாட்டுப் புராணச் செய்திகளையும் பயன்படுத்தியுள்ளார்**வ்வாறு தமிழ் மரபுக் கேற்பஇ ., தம் காப்பியத்தைக் கவிஞர் அமைத்துள்ளமை புலனாகிறது.

வீரமாமுனிவர் **வெளிநாட்டவராக இருந்தும் தமிழ் மரபைக் கருத்தாகக் கடைப்பிடிப்பது சிறப்பு**அவர் . வருணிக்கின்ற**பாலத்தீன நாடும், எருசலேம் நகரும் தமிழ் மண்ணின் மணம் கமழ்வதாகவே** உள்ளன . **முன்னோர் மொழியைப் பொன்னேபோல் போற்றிய வீரமாமுனிவர் திருவள்ளுவர், சீவக சிந்தாமணி பாடிய திருத்தக்கதேவர், கம்பர், மாணிக்கவாசகர் போன்றோரின் நடை, சொல், உவமை, கருத்து போன்றவற்றைச் சூழலுக்குப் பொருத்தமாக** எடுத்தாள்கிறார்.

எடுத்துக்காட்டாக, கபிரியேல் வானதூதன் கடவுளின் நற்செய்தியை மரியாவிடம் உரைத்தபோது, மரியா கலக்கமுற்றதையும் அக்கலக்கத்தை வானதூதர் உணர்ந்தறிந்தார் என்பதையும் விளக்கவந்த வீர்மாமுனிவர்,

"**பளிங்கு அடுத்தவற்றைக் காட்டும் பான்மையால் இவள் முகத்தில்**

உளம் கடுத்தவற்றை ஓர்ந்த கபிரியேல் உறுதி சொல்வான். (பாடல் 535) என்ற வரிகளில் திருவள்ளுவரின்,

"**அடுத்தது காட்டும் பளிங்குபோல நெஞ்சம்**

கடுத்தது காட்டும் முகம்" என்னும் குறட்பா அமைவதைக் காணலாம்.

தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே, **தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனும் பெருமை தேம்பாவணிக்கே** உண்டு. தேம்பாவணி **கிறித்தவ விவிலியத்தில் வருகின்ற பல நிகழ்ச்சிகளை உள்ளடக்கியுள்ளது அவை .150க்கும் மேற்பட்ட எண்ணிக்கை**யில் உள்ளன.

www.ikedu.lk

அதே நேரத்தில் விவிலியத்தில் காணப்படாத பல செய்திகளையும் தேம்பாவணி கொண்டுள்ளது . அச்செய்திகள் பலவற்றையும் வீரமாமுனிவர் **ஆகிர்த மரியாவின் நூலிலிருந்து** பெற்றார்எடுத்துக்காட்டாக ., **யோசேப்பு துறவறம் புகச் சென்றபோது கடவுளருளால் மனம் மாறி, இல்லறத்திலேயே துறவியாக வாழ முடிவுசெய்து எருசலேம் கோவில் செல்வதும், அங்கு ஏற்கனவே கன்னியாக அர்ப்பணிக்கப்பட்டு வாழ்ந்த மரியா திருமணம் செய்ய முன்வந்தபோது அங்கே வரிசையாக நின்றுகொண்டிருந்த ஆடவர்களுள் யோசேப்பு கையில் பிடித்திருந்த கோல் அதிசயமாகத் தளிர்விட்டு, பூக்களால் நிறைந்ததும் அதையே கடவுள் தாம் யாரை மணக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார் என்று மரியா விளக்கம் பெற்று யோசேப்பை மணப்பதையும்** குறிப்பிடலாம்.

தேம்பாவணிக் காப்பியம் **இயற்கை வனப்பில் இறைவனின் தோற்றம், இல்லறம் துறவறம் ஆகியவற்றின் மாட்சி, உழைப்பின் மேன்மை, வறுமையில் செழுமை, கற்பின் பெருமை, கடவுளின் இலக்கணம், வானோர் உயர்வு, நரகோர் தாழ்வு, பாவத்தின் கொடுமை, அறத்தின் மேன்மை, காதலின் பெருமை, காமத்தின் தீமை** ஆகியவற்றை விளக்கும் **நீதி நூலாகவும்** விளங்குகிறது.



தேம்பாவணியில் வீரமாமுனிவர் **கிறித்தவ மறை உண்மைகளைத் துல்லியமாக** எடுத்துரைக்கிறார் .**மூவொரு கடவுளின் இரண்டாம் ஆளாகிய மகன் இவ்வுலகில் இயேசு கிறித்துவாக வந்து அவதரிக்கும் நிகழ்ச்சி, அவருடைய தாய் அன்னை மரியா அவரைக் கன்னியாகக் கருத்தரித்து, தம் கன்னிமை கெடாமலே அவரை ஈன்றளித்த செய்தி, இயேசு மனித குலத்தின் பாவத்திலிருந்து மக்களை மீட்டு விண்ணகப் பேற்றினை ஈந்திட தம் உயிரைச் சிலுவையில் கையளித்து மீண்டும் உயிர்பெற்றெழுந்த செய்தி** போன்றவை தேம்பாவணியில் விளக்கம் பெறுகின்றன.

தேம்பாவணியில் **பாட்டுடைத் தலைவன் யோசேப்பு (சூசை, வளன்) என்பதால் அந்நூலில் இயேசுவின் வாழ்க்கை வரலாறு, அவரது சிலுவைச் சாவு, உயிர்த்தெழுதல் போன்றவற்றை நேரடியாக எடுத்துரைக்கும் வாய்ப்பு இல்லை .இயேசு தமது பொதுவாழ்வைத் தொடங்குவதற்கு முன்னரே யோசேப்பு இறந்துவிட்டார்**எனவே ., வீரமாமுனிவர் மற்றொரு **உத்தி**யைக் கையாளுகின்றார்அதாவது ., **இயேசு வருங்காலத்தில் என்னென்ன போதனைகளை அறிவிப்பார், எவ்வாறு இறப்பார் என்ற செய்திகள் யோசேப்புக்குக் கடவுளால் முன்னரே அறிவிக்கப்படுவதாகவும், அச்செய்தியை யோசேப்பு தம் இறப்பிற்குப் பிறகு இறந்தோர் உலகம் சென்று அங்குள்ளோருக்கு எடுத்துக் கூறுவதாக**வும் வீரமாமுனிவர் எடுத்துக் கோக்கின்றார்.



இருந்த போதிலும், அங்கே **அன்னை மரியா மற்றும் இயேசுவின் வரலாறும் பின்னிப் பிணைந்து**ள்ளது. **மரியாவை மணந்த பின்னரும் திருமண உறவில் ஈடுபடவில்லை யோசேப்பு** மரியா .**கடவுளின் துணையால் கருத்தாங்கி ஒரு மகவை பெற்றெடுத்து அவருக்கு என்று "இயேசு" பெயரிடு**கிறார் . இயேசுவின் பிறப்புக்குப் பின்னர், **யோசேப்பும் மரியாவும் தம் குழந்தையோடு நாசரேத்து வந்து அங்கு சில ஆண்டுகள் வாழ்கின்றனர் .**

www.kedu.lk

பின்னர், **யோசேப்பைப் பிணிசேர்கின்றது** .பிணிவாய்ப்பட்டு **இறக்கும் நிலையில்** உள்ளார்அப்போது . அவரைச் சூழ்ந்து அவர்தம்**மனைவி மரியாவும் அன்புக் குழந்தை இயேசுவும்** நிற்கின்றனர் அவர்களது . **அன்பை உணர்கிறார் யோசேப்பு** அந்த .அவருடைய உள்ளத்திலும் அன்பு ததும்புகிறது .**அன்பின் வலிமை அவருடைய உயிர் உடலை விட்டுப் பிரிய விடாமல் பிடித்துவைக்கிறது** என தேம்பாவணியில் பாடுகிறார் வீரமாமுனிவர். அவர் அதனைப் **பொறுமையோடு தாங்கிக் கொள்கிறார்** பின்னர் யோசேப்பு . **உயிர்துறக்கிறார்**. இறந்த யோசேப்பு **மண்ணுலகோராலும் விண்ணுலகோராலும் முடிசூட்டப் பெறுகிறார்**. தன்னை வளர்த்து ஆளாக்கிய **யோசேப்பு மண்ணுலகில் இறைவனுக்கு உகந்தவராக வாழ்ந்து சிறப்புற்றமையால் அவருக்கு விண்ணக மகிழ்ச்சியில் பங்களித்து அவரை மாட்சிப்படுத்த வேண்டும் என்று இயேசு தந்தையாம் இறைவனிடம் கேட்கின்றார்** முழுமுதல் .**இறைவனாகிய தந்தை அவ்வாறே யோசேப்புக்கு மணிமுடி சூட்டுகின்றார்** பின்னர் .**மகனாம் இறைவன் இயேசு யோசேப்புக்கு மகுடம் சூட்ட, இறுதியில் தூய ஆவி இறைவன் யோசேப்பைப் பெருமைப்படுத்துகிறார்**.

தேம்பாவணியில் அவருடைய **மாட்சி** பல இடங்களில் பாடப்படுகிறது யோசேப்பு இவ்வுலகில் . **மரியாவையும் இயேசுவையும் அன்போடு பாதுகாத்து வளர்த்து, கடவுளின் திட்டத்தை விருப்புடன் நிறைவேற்றினார் என்பதுவே அவருக்கு இறைவன் மாட்சி அளித்ததற்கு அடிப்படை** ஆகும்.

<u>வீரமாமுனிவர்.</u>

வீரமாமுனிவர் (**நவம்பர் 8, 1680 - பிப்ரவரி 4, 1747**) **இத்தாலி நாட்டிலுள்ள கேசுதிகிலியோன்** என்னும் இடத்தில் பிறந்தார் - இவரின் இயற்பெயர் .**கான்ஸ்டான்டின் ஜோசப் பெஸ்கி** (constantine Joseph Beschi). இவர் **இயேசு சபையைச் சேர்ந்த குரு** ஆவார் .**கிறித்தவ மதத்தைப் பரப்பும் நோக்கில், 1709ஆம் ஆண்டு இயேசுசபைப் குருவானபின், 1710 ஆம் ஆண்டு தமிழகத்துக்கு வந்தார்**.


Constanzo Beschi

இவர் **தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் சிறப்பான பணி**களைச் செய்துள்ளார் .23 நூல்களைத் தமிழில் எழுதியதுடன், **இயேசுக் கிறித்துவின் வாழ்க்கை தொடர்பான நிகழ்ச்சிகளையும் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய புனித யோசேப்பின் வரலாற்றையும் தமிழ்ப் பண்பாட்டுக்கேற்ப என்ற பெருங்காவியமாக இயற்றியது "தேம்பாவணி" தமிழ்ப் இவரின் புலமைக்குச் சான்றாக** உள்ளது. இவர் **லிஸ்பனில் இருந்து புறப்பட்டு 1710 சூனில் கிறித்தவ மதம் பரப்பு பணி செய்ய கோவா வந்து சேர்ந்தார்**.

மறை பரப்பு முயற்சிக்காக முதலில் தமிழைக் கற்றுக்கொண்ட இவர், தமிழில் வியத்தகு புலமை பெற்று **இலக்கணம், இலக்கியம், அகராதி படைத்து தமிழுக்குச் செழுமையூட்டினார்** தமது .**பெயரினை தைரியநாதசாமி என்று முதலில் மாற்றி**க் கொண்டார்பின்னர் ., **அப்பெயர் வடமொழி என்பதாலும், நன்கு தமிழ் கற்றதாலும், தமது இயற்பெயரின் பொருளைத் தழுவி, செந்தமிழில் வீரமாமுனிவர் என மாற்றி**க் கொண்டார். 1822 இல், **முதன் முதலாக இவருடைய சரித்திரத்தைத் தமிழில்**

எழுதி வெளியிட்ட வித்துவான் முத்துசாமி பிள்ளை இவருடைய **நடையுடை பாவனைகளை**, அந்நூலில் கீழ்வருமாறு எழுதியிருக்கிறார்.

இந்தத் தேசத்தில் வந்தநாள் முதலாகப் **புலால் மாமிசங்களை நிவர்த்தித்து, இரண்டு தமிழ்த் தவசிப் பிள்ளைகளைப் பரிசுத்த அன்னபாகஞ் செய்யச் சொல்லித் தினமொரு பொழுது மாத்திரம் போசனம்** பண்ணிக்கொண்டிருப்பார்தமது மடத்திலிருக்கும் பொழுது ., **கோபிச் சந்தனம் நெற்றியிலிட்டுக் கொண்டு, தலைக்குச் சூரியகாந்திப பட்டுக் குல்லாவும், அரைக்கு நீர்க்காவிச் சோமனுந் திருநெல்வேலிக் கம்பிச் சோமன் போர்வை முக்காடுமிட்டுக் காலிற் பாதகுறடும் போட்டுக் கொண்டிருப்பார்** இவர் வெளியிற் சாரி போகும் போது, **பூங்காவி அங்கியும் நடுக்கட்டும், வெள்ளைப்பாகையும், இளங்காவி யுத்தரிய முக்காடும், கையினிற் காவியுருமாலையும், காதில் முத்துக் கடுக்கனும், கெம்பொட்டுக் கடுக்கனும், விரலிற்றம்பாக்கு மோதிரமும், கையிற்றண்டுக் கோலும், காலிற் சோடுடனும் வந்து, பல்லக்கு மெத்தையின் மேலிட்டிருக்கும் புலித்தோலாசனத்தின் மேலெழுந்தருளியிருந்து, உபய வெண்சாமரை வீசவும், இரண்டு மயிற்றோகைக்கொத் திரட்டவும், தங்கக் கலசம் வைத்த காவிப்பட்டுக் குடைபிடிக்கவுஞ் சாரிபோவார்** . இவரிறங்கும் இடங்களிலும்**புலிதோலாசனத்தின் மேலுட்காருவார்**.

முத்துசாமிப் பிள்ளை வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றை **1822இல் எழுதி, அந்நூலை அவரே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1840இல் வெளியிட்டார்** அவர் .1840இல் இறந்த பிறகு அவரது தமிழ் வரலாற்றை **1843இல் அப்பாவுபிள்ளை பதிப்பித்தார்**எனவே ., வீரமாமுனிவர் வரலாறு பற்றி அச்சான முதல் நூல் இதுவேஆனால் ., **இதற்கு முன்னரே சாமிநாத பிள்ளை என்பவர் முனிவரின் வரலாற்றை 1798இல் எழுதியதாகவும், அது அச்சேறாமல் இருந்ததாகவும் அதைத் தாம் பயன்படுத்தியதாகவும் முத்துசாமிப் பிள்ளையே தம் வரலாற்றில் கூறியுள்ளார்**.



வீரமாமுனிவரின் வரலாற்றை எழுதிய **முத்துசாமிப் பிள்ளையின் நூலில் முனிவரின் வாழ்க்கைமுறை பற்றிய பல தவறான செய்திகள் அடங்கியிருப்பதை வீரமாமுனிவர் தொண்டும் புலமையும் என்னும் ஆய்வுநூலில் ச. இராசமாணிக்கம் சுட்டிக்காட்டியுள்ளார்** . முனிவர் பற்றிய **தவறான செய்திகள் எழுந்ததற்கு முக்கிய காரணம் தத்துவ போதகர் என்று சிறப்புப்பெயர் பெற்ற இராபர்ட் தெ நோபிலி என்னும் மறைபரப்பாளர் பற்றிய செய்திகளை வீரமாமுனிவருக்கு ஏற்றியுரைத்ததே என்று இராசமாணிக்கம் ஆய்வினடிப்படையில் நிறுவி**யுள்ளார்.

இலக்கியச் சுவடிகளைப் பல இடங்கள் சென்று தேடி எடுத்ததால் **"சுவடி தேடும் சாமியார்"** எனவும் அழைக்கப்பட்டார்இவற்றில் காண அரிதான . .பல பொக்கிசங்கள் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது **தமிழின் சிறப்பை மேல் நாட்டார்** உணர **திருக்குறள், தேவாரம்**[சான்று தேவை], **திருப்புகழ்**[சான்று தேவை], **நன்னூல்**[சான்று தேவை], **ஆத்திசூடி** போன்ற நூல்களை [சான்று தேவை]**பிற ஐரோப்பிய மொழியில் வெளியிட்டார்**. தமிழ் கற்க ஏதுவாக தமிழ் - லத்தீன் அகராதியை உருவாக்கினார் அதில் 1000 **தமிழ்ச் சொற்களுக்கு லத்தீன் விளக்கம் அளிக்கப்பட்டது** இதுவே .**முதல் தமிழ் அகரமுதலி** ஆகும் பின்பு .4400 **சொற்களைக் கொண்ட தமிழ்-போத்துக்கீய அகராதியை உருவாக்கினார். சதுரகராதியை, நிகண்டுக்கு ஒரு மாற்றாகக் கொண்டு வந்தார்.**

அக்காலத்தில் சுவடிகளில் மெய்யெழுத்துகளுக்கு புள்ளி வைக்காமலே எழுதுவது வழக்கம். புள்ளிக்குப் ஈடாக நீண்ட கோடிருக்கும். மேலும் குறில், நெடில் விளக்க என்று "ா ா ா ா" சேர்த்தேழுதுவது வழக்கம். "**ஆ**" என எழுத "**அர**" என 2 எழுத்துக்கள் வழக்கிலிருந்தது. (**அ:அர, எ:எர**) இந்த நிலையை மாற்றி "**ஆ, ஏ**" என மாறுதல் செய்தவர் இவர்.

தொன்னூல் விளக்கம் என்ற நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைத் தொகுத்தார். கொடுந்தமிழ் இலக்கணம் என்ற நூலில், **தமிழில் முதல்முதலாகப் பேச்சுத்தமிழை விவரிக்க முனைந்தவர்**வழக்கும் செய்யுளுமே ஒரு மொழியின் இலக்கணமாக . அமையுமென்றாலும், இரட்டை வழக்கு மொழியான தமிழில், பேச்சுத் தமிழுக்கு இலக்கணம் அமைந்திராத காலத்தில் கொடுந்தமிழ் இலக்கணம் வகுத்தது சிறப்பான முயற்சியே எனல் வேண்டும்.

திருக்குறளில் அறத்துப்பாலையும், பொருட்பாலையும் இலத்தீன் மொழியில் பெயர்த்தவர் வீரமாமுனிவர் .**உரைநடையில் வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக் கண்ணாடி, செந்தமிழ் இலக்கணம், பரமார்த்த குருவின் கதை, வாமன் கதை** ஆகிய நூல்களைப் படைத்தார். **திருக்காவல் ஊர்க் கலம்பகம், கித்தேரி அம்மன் அம்மானை** இவரது பிற நூல்கள்.



1728-இல் புதுவையில் இவரின் **"பரமார்த்த குருவின் கதை"** என்ற நூல் முதல்முறையாக இவரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இந்த நகைச்சுவைக் கதைகள் **Jean de la Fontaine** (1621-1695) எனும் பிரன்சியரால் எழுதப்பட்டது. **ஐரோப்பாவில் பிரபலமாக இருந்ததை பெஸ்கி தமிழிலும் மொழிபெயர்த்தார்** என்று சிலர் கருதுகின்றனர். இது **தமிழில் முதல் முதலாக வந்த நகைச்சுவை இலக்கியம்** ஆகும்.

காவியத்தில் தேம்பாவணி இவர் இயற்றியது. **மூன்று காண்டங்களில் 36 படலங்களைக் கொண்டு மொத்தமாக 3615 விருத்தம்'விருத்தப் பாக்களால்** ஆனது இந்தக் காவியம். இதிலும் ஒரு சிறப்பு இருக்கிறது. **பின்னிணைப்பாக யாப்பு வடிவங்களை அளித்திருக்கிறார். தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனும் பெருமை தேம்பாவணிக்கே உண்டு**. மேலும் **வீரமாமுனிவரைப் போல, வேறெந்தக் காப்பியப் புலவரும் சிற்றிலக்கியம், அகராதி, இலக்கணம் உரைநடை எனப் பிற இலக்கிய வகைகளில் நூல்கள் படைத்தாரல்லர்.**

வீரமாமுனிவரின் வாழ்வையும் பணியையும் விரிவாக ஆய்ந்துள்ள **முனைவர் ச. இராசமாணிக்கம் வீரமாமுனிவரின் இறப்புப் பற்றிய செய்தி**யைக் கீழ்வருமாறு தருகின்றார்,

1742இல் மதுரைப் பணித்தளம் விட்டுச்சென்ற வீரமாமுனிவர், கடற்கரையில் 1745 வரை பணிபுரிந்தபின், 1746-47 ஆண்டுகளைக் கேரள நாட்டிலுள்ள அம்பலக்காட்டில் அமைந்த குருமடத்தில் செலவழித்து, 1747ஆம் ஆண்டு பெப்ருவரி நான்காம் நாளில் தமது 67ஆம் வயதில் உயிர்துறந்தார் .

www.kedu.lk

திப்பு சுல்தான் காலத்தில் நடந்த வேதகலாபனையில் பல கிறித்துவ நிறுவனங்கள் இடம் தெரியாமல் அழிந்து போயின .வீரமாமுனிவரது கல்லறைக்கும் அந்தக் கதி நேர்ந்திருக்கிறது .

தமிழுக்கு இவ்வளவு தொண்டு செய்த பெரியார், தமிழ் நாட்டை விட்டுக் கேரள நாடு சென்று செத்ததும், அங்கு அவரை அடக்கம் செய்த கல்லறையும் தெரியாத நிலையில் இருப்பதும், தமிழ் மக்களுக்கு வருத்தமளிக்கும் செய்திகள். நிற்க, சிலர் இவர் மணப்பாட்டில் இறந்தார் என்றும், வேறு சிலர் மணப்பாறையில் உயிர் துறந்தார் என்றும் கூறுவது வரலாற்றுச் சான்றுக்குப் புறம்பானது. 1746-47 ஆண்டுகளில் கேரள நாட்டு அம்பலக்காட்டில் முனிவர் வாழ்ந்தார் என்பதையும், அங்கே மரித்தார் என்பதையும் அக்கால அதிகாரபூர்வமான அறிக்கையின் வாயிலாக உறுதியாக அறியலாம்.

வீரமா முனிவர் எழுதிய **பரமார்த்த குருவின் கதையை 1822 இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த பெஞ்சமின் பாபிங்டன்** என்பவர் **"வீரமா முனிவர் திருச்சியில் சந்தா சாகிப் என்பவரின் அரசில் திவானாகப் பணியாற்றினார் என்றும்இ பின்னர் மரதர்களின் படையெடுப்பை அடுத்துஇ வீரமாமுனிவர் டச்சு ஆட்சியில் இருந்த காயல்பட்டினத்தில் வாழ்ந்து நோயால் தாக்கப்பட்டு இறந்தார்"** எனக் குறிப்பிடுகிறார்.



(தேம்பாவணி) காட்சிப்படலம் (1 – 34 செய்யுள்கள்)

வீரமாமுனிவரால் **1726** இல் இயற்றப்பட்ட இக்காப்பியம், **சூசை (வளன்) யின் வரலாற்றைக்** கூறுகின்றது. **முதலாவது காண்டத்தின் பதினொராவது படலமாக, காட்சிப் படலம்** உள்ளது. **இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பினை அறிந்த இடையர்களும், வானநூல் வல்லுநர்களான மூவர்சர்களும் அத்திருக்குழந்தையை நேரில் கண்டு வணங்கிய செய்திகள் இப்படலத்தில்** எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இப்படலத்தில் குறிக்கப்பட்டுள்ள **1 - 34** வரையிலான செய்யுள்கள் மட்டுமே பாடப்பரப்பில் உள்ளடக்கப் பட்டுள்ளன. இவை **திருக்குழந்தையை நேரில் கண்டு வணங்கிய செய்தியைக்** கூறுவன.

இடையர் வந்து குழந்தையை வணங்குதல்

01. இன்ன வாயில் இன்ன தன்மை இன்ன யாவும் ஆகையில்
பொன்ன நாடு துன்னும் உம்பீர் பொன்னு ருக்கொடு ஆங்குபோல்
மின்னல் நேரும் அன்னை ஈன்ற வேத நாத னைத்தொழ,
உன்ன லாத கோவர் இன்பம் உண்ண உற்று அழைத்தனர்.

குகையாகிய இந்த இடத்தில் இந்த விதமாக இலையெல்லாம் நடக்கும்போது, விண்ணுலகத்தில் வாழும் விண்ணவர்கள் பொன்தன்மையான வடிவம்கொண்டு அந்த இடத்தைச் சென்று சேர்ந்து, இடையர் எண்ணுவதற்கு அருமையான மகிழ்ச்சி அடையுமாறு மின்னல் போன்ற கன்னித்தாய் பெற்ற மறைமுதல்வனாகிய குழந்தையைத் தொழுமாறு அழைத்தனர்.

02. கொழுந்து உறும்கு ளிர்ந்த முல்லை கொண்ட கோவர் கூட்டமும்
எழுந்து உறும்கு டத்தி யாரும் ஏகி, ஆய காட்சியால்
விழுந்து உறும்க ளிப்பு விஞ்சி வேத நாதன் மேல்பதம்
தொழுந்தொ றும்தொ ழுந்தொ றும்து ளங்கு கின்ற தோற்றமே.



தளிரையுடைய குளிர்ந்த முல்லை நிலத்தைக் குடியிருப்பாகக் கொண்ட இடையர் கூட்டமும், அவர்களுடன் மிகுந்து வரும் இடைச்சியருமாகச் சேர்ந்து சென்று அங்கே கண்ட காட்சியால் உண்டாகும் மகிழ்ச்சி மிகுந்து, திருமறையின் தலைவனாகிய அக்குழந்தையின் கால்மீது விழுந்து வணங்குந்தோறும் வணங்குந்தோறும் விளங்குகின்ற காட்சிகொண்டனர்.

03. **மாலை மேவு வேங்கை பற்றி வண்டு உணாது எனமன**
மாலை மேவு வேங்கை பற்றி வண்டு உணாது எனமன
மாலை ஆக வீங்கு வந்து வாசம் ஆரும் முல்லையார்
மாலை ஆக ஈங்கு வந்து வாசம் ஆரும் முல்லையார்.

வண்டு மாலையில் மலரும் வேங்கை மலரை நெருங்கித் தேனை உண்ணாத தன்மைபோல, மனமயக்கத்தை அடைவதற்குக் காரணமான பொன்னின்மீது ஆர்வம்கொண்டு குற்றத்தைக் கொள்ளாதது என்று சொல்லத்தகுந்த மன இயல்பு கொண்டு மிகவும் மகிழ்ந்து, மணம் பொருந்திய முல்லை மலர்களால் தொடுத்த மாலையும் கையுமாக வந்து, அந்த இடையர் குடிகொண்டவராக நிறைந்து நிற்பார்கள்.

04. பஞ்ச அரங்கில் இன்பு அரங்கு பான்மை யால டைவரத்து
அஞ்ச லம்கு ழித்து உவந்து அமிழ்ந்த மிழ்ந்து உளம்தனில்
விஞ்ச இன்பம் நெஞ்சு அடங்கில் மேவல் ஆர்ந்த தம்முயிர்
ஊஞ்சல் ஆடி வாயின் வாயில் உற்று உரைத்தல் உற்றனர்.

ஐம்பொறிகளாகிய மண்டபத்தில் இன்பம் நுகின்வர்ந்த தன்மையால் அடைந்த வரம் என்னும் அழகான கடலைத் தோண்டி, அதனுள் மகிழ்ந்து மூழ்கி, மனதில் பேரின்பம் மிகுதியாக அடைந்து, அப்பேரின்பம் மனதிற்குள் அடங்காமல் மேலோங்குமாறு நுகர்ந்த தம் உயிர் ஊஞ்சலாட, வாயின் வழியாக அப்பேரின்பம் வெளிப்பட பின்வருமாறு கூறினர்.

05. எண்ணு ளேய டங்க லின்றி ஏந்து மாட்சி பூண்டுவான்
விண்ணுளேபொ லிந்து வந்த விண்ண வரக்கு வேந்தனே
புணணு ளேம ருந்து நீவிப் போன ஆட்டை மீட்கவோ
மண்ணு ளேயெ ழுந்து வந்து மண்ணன் என்று உதித்தனை.

எமது எண்ணத்தினுள்ளே அடங்குதல் இல்லாமல் உயர்ந்த மாண்பை அணிந்து, மேலான விண்ணுலகில் செழிப்புடன் மகிழ்ந்து இருந்த வானவர்க்கு மன்னனே! உன்னைவிட்டுப் பிரிந்து சென்ற ஆட்டை அதன் புண்ணுக்கு மருந்து தடவி, மீட்டுக் காப்பதற்காகவே இம்மண் உலகிற்கு வந்து மனிதனாகப் பிறந்துள்ளாய்.

06. ஒண்த லங்கள் அண்ட உம்ப ரும்தொ ழும்ப ராபரா
விண்த லம்க லந்தி லங்கு வெணக் ளங்கன் ஒப்பெனா
மண்த வங்கள் எங்கும் யாரும் வாழ ஈர வெண்குடை
கொண்டு அவங்கல் கொண்ட **தேறல் கொண்ட அன்பு கொற்றவா.**

www.ikedu.lk

ஒளிமயமான இடங்களையுடைய விண்ணுலகில் வாழும் விண்ணவரும் வணங்கும் இறைவனே! விண்ணுலகமும் கலந்து விளங்கும் மண்ணுலகின் இடங்களெங்கும் யாவரும் நல்வாழ்வு அடைவதற்காக, வான மண்டலத்தில் தங்கி விளங்கும் வெண்ணிலவிற்கு ஒப்பு என்று சொல்லத்தக்க குளிர்ச்சி தரும் வெண்கொற்றக் குடையும் கொண்டு மலர்மாலையில் பொருந்திய தேனைப் போன்ற இனிமையான அன்பினையுடைய மன்னவனே!

07. **மணிக்க லத்து அகத்து அமைத்த வான மிர்த மார்பினோய்!**
பிணிக்கு லத்து அகத்து உதித்த பெற்றி ஆயந்து வாழ்ந்திடப்
பணிக்கு லத்து அகத்து அடங்கு இலால்ப ணித்த நின்பணி
அணிக்கு லத்து அகத்து அணிந்த அன்பு போகில் ஆகுமே.

மாணிக்கப் பாத்திரத்தில் இட்டு வைத்த வானுலக அமிழ்தம் போன்ற மார்பினை உடையவனே! நோய் கொண்ட மனித குலத்தில் நீ வந்து பிறந்த தன்மையை ஆராய்ந்து வாழ்த்துவது என்பது, சொற்களின் கூட்டத்துள் அடங்காமையால், கட்டளையிட்ட உமது பணியினை அணி வகைகளாகக்கொண்டு, மனத்துள் அணிந்து நிற்கும் எங்கள் அன்பு எப்பொழுதும் நீங்காமல் நிலைபெறுவதாகும்.

08. இரவி வேய்ந்த கஞ்சம் ஈன்ற இலகு **முத்தம் ஏய்ந்துவெல்**
புரவில் வேய்ந்த சேயை ஈன்ற பொருவில் அன்னை வாழுதி
சுருதி வேய்ந்த மாட்சி பூண்ட துணைவன் ஆய மாதவத்து
உருவில் வேய்ந்த வேந்த வாழி உறுதி என்று வாழ்த்தினார்.

"கதிரவனை அணிந்து, தாமரைமலர் பெற்ற ஒளியினையுடைய முத்துப் போன்று, எவரையும் வெற்றிகொள்ளும் கொடையில் சிறந்த மகனைப் பெற்றெடுத்த ஒப்பு இல்லாத அன்னையே! நீ வாழ்க! திருமறையை அணிந்த மாண்பினையுடைய துணைவனாகிய பெருந்தவத்து வடிவமாகத் தோன்றிய மன்னனே! நீ நன்கு வாழ்க!"என்று அந்த இடையர் வாழ்த்தினர்.



09. இடத்து இடத்து அடர்த்தி உற்ற இக்கு உடைத்த இன்பு சொல்
குடத்தி யர்க்கு அமைத்த பற்றல் கூர்ந்து தோன்றல் தாள்மிசை
தடத்து ணர்க்கு அமைத்த தேறல் தாங்கு மாலை சாத்தலும்
முடித்த திங்களைத் தொடுத்து உடுக்கள் துற்றல் ஒத்ததே.

இடங்கள் தோறும் நெருக்கமாக நின்ற கரும்பை வென்ற இனிய சொல்லையுடைய இடைச்சியர்க்கு உண்டான ஆசை அதிகமாகி, பெரிய மலரிதழ்களிடையே பொருந்திய தேனைத் தாங்கிநின்ற மாலைகளைத் திருமைந்தனின் திருவடிகளில் அணிந்தனர். அது நிறைநிலவைச் சூழ்ந்து விண்மீன்கள் நெருங்கி இருத்தலை ஒத்திருந்தது.

10. ஏதம் இன்றி மாலி ஈன்ற காந்தி என்று தோன்றலைக்
கோது அகன்று உயிர்த்த கோதை தாள்முன் அன்ன கோவலர்
சீத இன்ப மோடு இரங்கு தேன மிழ்தம் ஈகலும்,
பாதம் ஒன்று **சோமன் ஈன்ற பால்நி லாவை மானுமே**.

குற்றம் இல்லாமல் கதிரவன் தந்த ஒளிக்கதிரைப் போல, தன் கன்னிமைக்குக் குற்றம் இல்லாமல் திருமைந்தனைப் பெற்றெடுத்த மலர்மாலை போன்ற மரியாளின் அடிகளில், குளிர்ந்த மகிழ்ச்சியுடன் இனிய பாலை அந்த இடையர் காணிக்கையாகத் தந்தனர். அது மரியாளின் பாதங்களில் பொருந்தியுள்ள நிலவு தந்த பால் ஒளியை ஒத்து இருந்தது.

www.ikeou.lk

11. பானி லத்து அமைத்த அன்பு **பதுமம் நேரு கண்**செயத்
தேனி லத்தி னாரை நோக்கு சிறுவன் இன்பு காட்டலால்
மேனி லத்தி னாரின் ஒத்த விரியு காட்சி உற்றுளம்
வானி லத்தின் ஆர்ந்த இன்பு மலிய வாழ மாந்தினார்.

தேன் மிகுந்த முல்லை நிலத்து இடையரை நோக்கி, குழந்தை நாதன், மரியாளின் காலடியில் நிலத்தில் காணிக்கையாகப் பாலை இட்டு வைத்த அந்த அன்பைத் தாமரை மலர் போன்ற தன் கண்களால் பார்த்து, இன்பத்தைக் காட்டியதால் அந்த இடையர், விண்ணவருக்குச் சமமான விரிந்த அறிவைப் பெற்று, தம் மனம் விண்ணுலகிலுள்ள மிகுதியான இன்பத்தைப் பெற்று வாழுமாறு அருந்தினர். (அனுபவம் பெற்றனர்.)

12. கன்னி ஆய தாயும், ஓங்கு காவ லானும் அன்புற
இன்னி றாலி னும்க னிந்த இன்ப அம்சொல் ஓதலால்
உன்னம் மேவும் ஈர அன்பு முன்னம் உள்ளு றாமையால்
மின்ன மாரி தூவல் ஒத்த வீழும் நாட்ட மாரியே.

கன்னியாகிய தாய் மரியாளும், அக்கன்னிகைக்குச் சிறந்த காவலனாகிய சூசையும் இனிமையான தேன் அடையினும் இளகிய மனதுடன் மகிழ்ச்சி தரும் அழகிய சொற்களை அன்புடன் கூறியமையால், அந்த இடையர் தம் சிந்தனையில் பொருந்திய குளிர்ச்சியான அன்புள்ளத்தினுள் அடங்காமையால் அவர்களின் கண்களிலிருந்து விழும் மகிழ்ச்சிக் கண்ணீர் மழை, மின்னலுடனான மழைநீர்த் துளிகளோடு ஒத்திருந்தது.

13. ஏவ லாகி மூவ ரையிறைஞ்சி ஏங்கி ஏகினர்
ஆவல் ஆகி ஆங்கு வைத்த ஆவி அல்லது இல்லதால்
மேவல் ஆகி ஆவி யாக வேய்ந்த அன்பு இலாதெனில்
ஓவல் ஆகி வெற்று உடல்கள் ஊரை உற்றல் ஒத்ததே.

பிரிந்து செல்லுமாறு கட்டளை ஆனதால், மூவரையும் வணங்கி அந்த இடையர் ஏக்கத்தோடு சென்றனர். ஆர்வம் கொண்டு அங்கு இட்டுவைத்த உயிரேயல்லாமல் வேறு உயிர் தங்களுக்கு இல்லாமையால், அதற்கு இசைந்து, தங்களுக்கு உயிராக அந்த மூவர்மீது கொண்ட அன்பு மட்டும் இல்லாமல் போயிருந்தால் வெறும் உடல்கள் மட்டுமே நீங்கி ஊரை அடைவதற்கு ஒப்பாக இருந்திருக்கும்.

14. ஏக ஆணை ஏக எங்கும் ஏகன் ஆகி ஆள்பவன்
மாகம் மேவு மாடம்நீக்கி மாடு மேவுஉழைக்குறைந்து
ஆகம் ஆடை வேந்தர் நீக்கி ஆய ரைத்தெ ரிந்ததென்று
ஓகை யாக ஓக னோடும் ஓங்கு தாயும் வாழ்த்தினாள்.



தன் ஒரே ஆணை எல்லா இடங்களுக்கும் செல்ல ஒருவனாக இருந்து ஆட்சி செய்யும் இறைவன், வானத்தைத் தொடும் மாளிகையை விலக்கி, மாடுகள் தங்கும் இடத்தில் தங்கி, உடலில் பொன் அணிகலன்கள் அணிந்த மன்னரை நீக்கி இடையரைத் தெரிந்து கொண்டதால் உவகை கொண்டு மகிழ்ச்சி அடைந்த சூசையோடு சிறந்த தாயும் திருமைந்தனை வாழ்த்தினாள்.

www.ikedu.lk

சாந்தி ஐயமும் கன்னித் தாய் பதிலும்



15. முன்ன ருந்திய தீஞ்சுவை முல்லையார்
பின்ன ருந்திடப் பெட்புறீஇ நாடொறும்
மின்ன ருந்திய மெல்லடி யாள்கரத்து
அன்ன ருந்திருச் சேய்தொழ அண்ணுவார்.

இனிய சுவையை முன் அருந்திக் கண்ட இடையர், பின்னும் அதனை நுகர்வதற்கு ஆர்வங்கொண்டு, மின்னல் ஒளியை உட்கொண்டு விளங்கிய மென்மையான அடிகளையுடைய மரியாளின் கைகளில் அந்த அருமையான திருமைந்தனைக் கண்டு தொழுவதற்காக ஒவ்வொரு நாளும் நெருங்குவர்.

16. அண்ணி **நீர்தவழ் தீயென அம்புயக்**
கண்ணி தாள்மிசை பெய்துழி, காதலன்
விண்ணின் நீர்முகில் மின்னென நோக்கலோடு
உண்ணி வாவொழன்பு ஓர்மழை தூவினான்.

இடையர் நெருங்கி, நீரில் தவழும் நெருப்பு போன்ற தாமரை மலர்களால் ஆன மாலையைத் தன் அடியில் வைத்தபோது, அன்பு கொண்ட இறைமைந்தன், வானத்தில் நீரைக்கொண்ட மேகம் மின்னுவதுபோல அவர்களைப் பார்த்த பார்வையால் இடையர் உள்ளத்தில் மெய்யறிவு ஒளியைத் தந்ததோடு மகிழ்ச்சியையும் ஒரு மழை போலத் தூவினான்.

17. தூவி ஓடிய வாரிது வற்றொடு
காவில் ஓடிய முத்தெனக் காதலால்
நாவில் ஓடிய நல்புகழ் சிந்துவார்
ஏவி ஓடிய **கோல்விழி** ஏந்தினார்.

மகிழ்ச்சி மழை பொழிந்து ஓடிய வெள்ளம் மிகுவதால் காட்டில் ஓடி, கரையில் ஒதுங்கிய முத்துப்போல, வில்லிலிருந்து ஏவப்பெற்று விரைந்து சென்ற அம்பு போன்ற கூர்மையான கண்களைத் தாங்கிய அந்த இடைச்சியர், அன்பினால் தம் நாவில் பொருந்திய நல்ல புகழுரைகளைப் பொழிந்து நிற்பர்.

18. ஏந்தி ஓங்குளத்து இன்பநெ டுங்கடல்
நீந்தி நீந்திநி லைக்கரை காண்கிலா
காந்தி வேய்ந்தன ளைக்கனிந்து ஓதுவாள்
சாந்தி நாமம்த ரித்தகு டத்தியே.

சாந்தி என்னும் பெயரைப் பெற்ற ஓர் இடைச்சி, உயர்ந்தோங்கிய தன் மனதில் கொண்ட மகிழ்ச்சி என்னும் நீண்ட கடலை நீந்தி நீந்தி நிலையான கரையைக் காணமுடியாமல், சூரியனின் ஒளியை ஆடையாக அணிந்துள்ள மரியாளைப் பார்த்து, கனிவுடன் பின்வருமாறு கூறுவாள்.

19. குடத்தி வாய்மொழிக் கோதெனக் கோதையாய்
உடத்தி நீயொரு வாதருள் ஓர்ந்துகேள்
மடத்து யாதெனும் கிள்ளைவ குத்தன
இடத்து யாவரும் கேட்பதுஇல் ஆவதோ?

மலர்மாலை போன்றவளே! இடைச்சியின் வாய்ச்சொல் குற்றமுள்ளதென்று வெகுண்டு நீ விலகாமல் அருளை நினைந்து கேள். கிளி அறியாமையால் சொல்லிய எதையேனும் இவ்வுலகத்தில் எவராவது கேட்பது இல்லை என்பது உண்டா?

www.ikeau.lk

20. ஆவ தேமுனர் ஆயது போலறிந்து
ஈவ தேநசை பின்றவ ளித்திடும்
கோல தேமிசை ஆள்தனிக் கோலினான்
நோவ தேயினிது என்றுதித் தான்கொலோ?

நடக்க இருப்பதனை முன்னர் நடந்தது போல் அறிந்து மக்களுக்குக் கொடுப்பதென்றால் அவருடைய ஆசை பின்னடையுமாறு மிகுதியாகக் கொடுப்பவனாய் விண்ணிலிருந்து தனியரசு செலுத்தும் ஒப்பற்ற செங்கோலையுடைய இறைவன், துன்புறுத்துவதே தனக்கு இனிமை என்று நினைந்து இந்த எளிமையான கோலத்தில் பிறந்தானோ?



21. கொல்லும் வேலொடும் கூர்நெடும் வாளொடும்
வில்லும் வாளியும் ஆழியும் வில்செய
ஒல்லும் ஆழியு ருட்டிடக் கோன்துணை
செல்லும் வீரவெஞ் சேனையில் ஆயதேன்.

பகைவரைக் கொல்லுகின்ற வேலோடும் கூர்மையான நீண்ட வாளோடும் வில்லும் அம்பும் சக்கரமும் ஆகிய படைக்கலன்கள் ஒளிவிட, தனக்கு உரிமையான ஆணைச்சக்கரத்தைச் செலுத்தி ஆட்சி செய்ய ஒரு மன்னனுக்குத் துணையாகச் செல்லக்கூடிய வீரமுள்ள கொடிய சேனை இவனுக்கு இல்லாமல் போனது ஏன்?

22. ஆய வான்மணி ஆர்ந்தணி உச்சியால்
காய நெற்றிக டந்துயர் மாடமும்
தூய பொன்னொடு சூழ்சுடர் பூணுமித்
தேய வேந்தர்தம் செல்வமொன்று இல்லதேன்?

ஆராய்ந்தெடுத்த அழகிய சிறந்த மணிகளை மிகுதியாக அணிந்த கோபுர உச்சியால் ஆகாயத்தின் நெற்றியையும் கடந்து உயர்ந்து நிற்கும் மாளிகையையும் தூய்மையான பொன்னால் செய்து சுற்றிலும் பதித்த மணிகள் ஒளிதரும் அணிகலன்களும் இங்குள்ள நாடுகளை ஆளும் மன்னர்களுக்கு உரிய மற்றச் செல்வங்களும் என ஒன்றும் இவருக்கு இல்லாது போனது ஏன்?

23. இல்ல தேயில இவ்வழி வந்ததேன்
செல்ல வான்வழி செய்யவந் தானெனில்
வல்ல வேடம ணிந்தும றைவற
வெல்ல வானுரு வேய்ந்தின்றநன்று அல்லதோ!

தான் குடியிருக்க வீடும் இல்லாமல், இந்தக் குகை இடத்தைத் தேடி வந்து பிறந்தது ஏன்? மக்கள் வானுலகம் செல்ல வழியைக் காட்ட வந்தார் என்றால் அதற்குரிய வல்லமையான கோலம் கொண்டு வெற்றி பெறுவதற்குரிய தன்னுடைய விண்ணுலக வடிவத்தை மறைவு இல்லாமல் வெளிப்படையாக வந்து தோன்றினால் அது நல்லது ஆகாதோ?

24. ஓவுண்டு ஆயவு ருக்கொடு என்னுளத்து
ஆவுண்டு ஆயின ஐயமி தேயினித்
தூவுண் தாதுவ தூய்**மலர் வாய்**திறந்து
ஏவுண்டு ஓதுதி ஆயிழை யாய்என்றாள்.

“அழகிய மெய்யறிவு அணிகளை உடையவளே! துன்பத்தை உட்கொண்டு அமைந்த இக்குழந்தை இறை மைந்தனின் வடிவத்தை நினைத்ததால் என் உள்ளத்தில் உண்டான ஆர்வம் காரணமாக எழுந்த

ஐயம் இதுவே. இனி தெளிக்கின்ற உண்ணத் தகுந்த தேனைக் கொண்ட உன் மலர்வாய் திறந்து, எனக்குத் தகுந்த கட்டளையையும் மனதில் கொண்டு இதற்கு மறுமொழி கூறுவாயாக" என்று சாந்தி கூறி முடித்தாள்.

25. என்ற வாசகம் எந்தைம னுக்குலம்
சென்ற வாயருள் காட்டிய சீருணர்
ஒன்றல் ஆகியு ருகிய தாய்புனல்
மின்த வாவிழி தூவிவி ளம்பினாள்.

என்று சாந்தி கூறிய வார்த்தையும் நம் தந்தையாகிய இறைவன் மனித இனத்தில் தானும் ஒருவனாய் வந்து பிறந்தபோது, அருள் காட்டிய சிறப்பும் தன் உணர்வில் பொருந்துமாறு ஏற்றுக்கொண்டு உருகிய தாயாகிய மரியாள், மின் ஒளி நீங்காத தன் கண்களிலிருந்து நீரைப் பொழிந்தவாறு பின்வருமாறு கூறினாள்.

26. அம்பி னாலப யர்செயும் அத்துணை
நம்பி னார்தனி நற்செய்கை ஈடிலார்
கொம்பில் ஏறுமி டைத்துவ ளும்கொடி
எம்பி ரான்வலிக்கு இத்துணை வேண்டுமோ?

"அம்பினால் வீரர் தமக்கு அடைக்கலம் தரும் அந்தத் துணையை நம்பி இருப்பவர், தனியாக நல்ல வீரச் செயலைச் செய்யும் வலிமை இல்லாதவர் ஆவார். இடையே துவண்டு விழக்கூடிய மென்மையான படரும் கொடியே கொம்பைத் துணையாகக் கொண்ட ஏறிப்படரும். ஏம்பெருமானின் வலிமைக்கு இவ்விதமான துணையெல்லாம் வேண்டுமோ?"

27. வேண்டும் ஓர்வினை வேண்டுமென் றால்முடித்து
ஆண்டும் ஓர்தனிக் கோலர **சான்ளரி**
தூண்டும் ஓர்சினம் தோன்றுழி அப்பகை
தாண்டும் ஓர்வலி தாங்குவர் யாவரோ?

"தான் செய்ய வேண்டிய ஒரு செயலைச் செய்ய வேண்டுமென்றால் நினைத்து அதை முடித்து ஓர் ஒப்பற்ற செம்மையான ஆட்சியால் உலகங்களையெல்லாம் ஆளும் அரசனாகிய இறைவனிடம் நெருப்பைத் தூண்டிவிட்டது போன்ற ஒரு சினம் தோன்றும் போது, அப்பகையைக் கடந்து செல்லத்தக்க ஒரு வலிமை கொண்டவர் யாரோ?

28. யாவ ரும்கடிது அஞ்சலொடு எஞ்சுவான்
மீவ ரும்துளி மேதினி மொய்த்ததும்
தீவ ரும்துளி ஐம்புரம் தீந்ததும்
தூவ ரும்பல வும்தொகை சொற்றவோ?



மக்கள் யாவரும் மிகுதியான அச்சத்தோடு இறந்து ஒழியுமாறு வானத்திலிருந்து பொழியும் மழைவெள்ளம், உலகத்தின் மேல் பரவி மூடிக்கொண்டதும், நெருப்பாக இறங்கி வரும் மழையால் சோதோம் கொமாரா முதலிய ஐந்து நகரங்கள் எரிந்ததும் ஆகிய இந்த இறைவனின் தூய்மையினால் வரும் வல்லமையான செயல்களைக் கணக்கிட்டுச் சொல்ல வேண்டுமோ?

www.ikedu.lk

29. சொற்த விர்ந்தவ ருள்தொழில் காலிதென்று
உற்று அவிர்ந்தவு டுமுடி யாளுரைத்து
இற்று அவிர்ந்தவி டைச்சியு ணர்ந்தபின்
பறற்று அவிர்ந்தவு ரைப்பயன் கூறுவாள்.

மேலும் சொல்லுக்கு அடங்காத அருட்செயலைக் கடவுள் செய்யும் காலம் இது என்று, மிகுதியாக ஒளி வீசிய விண்மீன்களை முடியாக அணிந்த மரியாள் கூறவும், ஒளியுள்ள இடைச்சியாகிய சாந்தி இதனை அறிந்த பின்னும், தன் ஆர்வம் விளங்க வார்த்தைகளைக் கூறத் தொடங்குவாள்.

30. கூறு வாள்செயும் கொள்கையின் என்றுளம்
பீறு வாளெனப் பின்னையோர் ஐயமும்
தேறு வாய்மொழி கேட்டிடச் செப்புவேன்
ஈறு வாயில எந்தையின் அன்னையே.

முடிவு காலம் இல்லாத நம் தந்தையாகிய இறைவனின் தாயே! வாள் பிளவுபடுத்தும் தன்மை போல, என் உள்ளத்தைக் கிழிக்கும் வாள் போல் மேலும் எழுந்த ஓர் ஐயமும் உண்டு. தெளிவடைவதற்காக உன் வாய்ச் சொல்லைக் கேட்டு, அறிவதற்காக இதைக் கூறுவேன்.

31. அன்னை தந்தையி லானறை நூல்படி
என்னை இங்களித் தோன்வரும் எல்லையின்
மின்னை ஒன்றிய வேடமெ டுத்தவன்
தன்னை யாவரும் தாழவி றைஞ்சுவார்.

திருமறை நூலில் கூறியவாறு, தாயும் தந்தையும் இல்லாமல் தானாய் விளங்கும் இறைவன், என்னையும் என் போன்ற மனிதரையும் மீட்டுக் காப்பவனாய் இவ்வுலகில் வந்து தோன்றும் இறுதிக் காலத்தில் மின்னல் போன்ற வேடம் எடுத்து வர, அவரை யாவரும் தாழ்ந்து வணங்குவர்.

32. அஞ்சு வாரவன் முன்னுலகு ஆள்பவர்
எஞ்சு வாரவ னையிறைஞ் சாரேன
விஞ்சும் ஆரணம் ஆகவி ளம்பினார்
துஞ்சு மாதவ ரேயெனச் சொல்லினாள்.

"இவ்வுலகத்தை ஆட்சி செய்யும் மன்னர் யாவரும் அவன் முன் அஞ்சி நடுங்குவர் என்றும் அவனை வணங்காதவர் கெட்டு அழிவர் என்றும் மறைந்துவிட்ட பெருந்தவத்தோர் மேலான திருமறை வாக்காகச் சொல்லியுள்ளார்கள்"என்று கூறினாள்.



33. சொல்லக் கேட்டனள் தொன்மொழித் தன்மையும்
வெல்லக் கேட்பரும் வெஞ்சினத்து எல்லைநாள்
ஒல்லக் கேட்டனர் உட்குற ஆவதைப்
புல்லக் கேட்கில் யான்புகல் வேனென்றாள்.

"சாந்தி சொன்னதைக் கேட்ட மரியாள், உலக முடிவு நாள் வருவது பற்றிப் பழங்காலத்தில் சொல்லப்பட்ட செய்திகளை வெல்லும் வகையிலும், கேட்பதற்கரிய கொடிய வெகுளியோடும் கேட்டவர் அஞ்சி நடுங்குமாறும் நடக்க இருப்பதனைப் பொருத்திக் கேட்க நீங்கள் விரும்பினால் நான் சொல்வேன்" என்றாள்.

www.ikedu.lk

34. **தாளெ ழும்கம லம்சுடர் தாவிய**
கோளெ ழுங்கதிர் கொண்டெனக் கேட்டலும்
வாளெ ழுந்தகண் மாதொடு யாவரும்
சூளெ ழுந்துறச் சொல்லெனச் சொல்லுவாள்.



இவ்வாறு சொல்லக் கேட்டதும் வாள் போன்ற கூர்மையான கண்களையுடைய சாந்தியுடன் மற்ற இடையர் யாவரும் மலர்த்தண்டில் எழுந்து நின்ற தாமரையின் ஒளி பரந்த சூரியனின் ஒளியை உட்கொண்டு மலர்ந்தது போல, வஞ்சினம் கூறிய முறையில் எழுந்துநின்று நன்றாகச் சொல் என்று விரும்பிக் கேட்க மரியாள் பின்வருமாறு தொடர்ந்து சொல்லுவாள்.

(தேம்பாவணி) காட்சிப்படல பகுதியிலூடாக வெளிப்படும் இயேசு கிறிஸ்துவின் மகிமை.

- மின்னல் போன்ற கன்னித்தாய் பெற்ற மறைமுதல்வன். (1)
  - "மின்னல் நேரும் அன்னை ஈன்ற வேத நாத னை.."
- திருமறையின் தலைவனாகிய குழந்தை. (2)
  - "விஞ்சி வேத நாதன்.."
- பாவத்தால் இறைவனை விட்டுப் பிரிந்த மக்களை இரட்சித்து, மீண்டும் இறைவனுடன் இணைக்கப் பிறந்த தேவகுமாரன், (5)
- விண்ணுலகும் மண்ணுலகும் வணங்கும் தெய்வம் (6)
- பெருந்தவத்து வடிவமாகத் தோன்றிய மன்னனே! (8)
- சொற்களால் வாழ்த்தப்பட முடியாதவர் (9)
- தன் ஒரே ஆணை எல்லா இடங்களுக்கும் செல்ல ஒருவனாக இருந்து ஆட்சி செய்பவர் (14)
- எளிமையான வாழ்வைத் தெரிந்து கொண்டவர் (14)
- விண்ணிலிருந்து தனியரசு செலுத்தும் ஒப்பற்ற செங்கோலையுடைய இறைவன் (20)
- தாய், தந்தை இல்லாத இறைவன் (31)
- திருமறையின் தலைவன் (வேத நாதன்) (1,2)

(தேம்பாவணி) காட்சிப்படல பகுதியிலூடாக வெளிப்படும் மரியாளின் பெருமை.

- கதிரவனை ஆடையாகக் கொண்டவள் (8, 18)
  - "காந்தி வேய்ந்தன.."
- நிலவைப் பாதங்களில் அணிந்தவள் (10)
- கன்னிமைக்குக் களங்கம் வராமல் மைந்தனைப் பெற்றவள் (10)
- மலர்மாலை போன்றவளே! (19)
  - "கோதையாய்.."
- அழகிய மெய்யறிவு அணிகளை உடையவளே! (24)
- மின் ஒளி நீங்காத கண்ணுடையவள். (25)
- விண்மீன்களை முடியில் சூடியவள் (29)
- இறைவனுக்கு இவ்வுலகத் தாயாகும் சிறப்பைப் பெற்றவள் (30)
  - "எந்தையின் அன்னையே.."
- இறைவனின் திட்டத்தை அறிவிக்கும் வல்லமையுடையவள் (26, 27)



www.ikedu.lk

(தேம்பாவணி) காட்சிப்படல பகுதியிலூடாக வெளிப்படும் சூசையின் பெருமைகள்.



- பெருந் தவத்தோன் (8)
  - "மாதவத்து உருவில் வேய்ந்த வேந்த.."
- மரியாளுக்கு சிறந்த காவலனாகிய, சிறந்த கணவனாக வாய்த்தவன் (12)
  - "ஓங்கு காவ லானும்.."
- இறைவன் யேசுபிரானை குழந்தையாக அடைந்துகொண்ட பேறுடையவன்.
- தேம்பாவணி என்ற இவ்விலக்கியத்தின் காவியத்தலைவனாக விளங்குபவன்.

(தேம்பாவணி) காட்சிப்படல பகுதியிலூடாக வெளிப்படும் இடையர் பண்பும் சிறப்பும்.

- இறைஅவதாரம் பற்றிய செய்தியை முதலில் அறிவிக்கப்பெறும் பேற்றினைப் பெற்றவர்கள்(1)
- திருக்குழந்தையை நேரில் கண்டு வணங்கும் வாயப்பினைப் பெற்றவர்கள் - பணிவுடையவர்கள்.
- மரியாள், சூசை, இயேசுக்கிறிஸ்து ஆகியோரைத் தம் உயிரெனப் போற்றியவர்கள். (13)
- தம்மால் இயன்ற காணிக்கைகளை (பால், மலர்மாலை) அவர்களுக்கு அளிப்பவர்கள். (9,10)
- கூர்மையான கண்களைத் தாங்கிய அந்த இடைச்சியர், அன்பினால் தம் நாவில் பொருந்திய நல்ல புகழுரைகளைப் பொழிந்து நிற்பவர். (17)
- தம் ஐயங்களை மரியாளிடம் வினவி (சாந்தி) தெளிவுறுபவர்கள். (19 - 28)

(தேம்பாவணி) காட்சிப்படல பகுதியில் பயன்பட்டுள்ள அணிகள்.

உவமைகள்:

- 'மின்னல் நேரும் அன்னை..' (1)
- 'மாலை மேவு வேங்கை பற்றி வண்டு உணாது என..' (3)
- 'தேறல் கொண்ட அன்பு கொற்றவா..' (6)
- 'வானமிர்த மார்பினன்..' (7)
- 'கஞ்சம் ஈன்ற இலகு முத்தம் ஏய்ந்துவெல் புரவில் வேய்ந்த சேயை..' (8)
- 'முடித்த திங்களைத் தொடுத்து உடுக்கள் துற்றல்..' (9)
- 'ஏதம் இன்றி மாலி ஈனற் காந்தி என்று தோன்றலைக் கோது அகன்று உயிர்த்த கோதை..' (10)
- 'பாதம் ஒன்று சோமன் ஈன்ற பால் நிலவு..' (10)
- 'பதுமம் நேரு கண்..' (11)
- 'மின்ன மாரி தூவல் ஒத்த வீழும் நாட்ட மாரியே..' (12)
- 'ஓவல் ஆகி வெற்று உடல்கள் ஊரை உற்றல் ஒத்ததே..' (13)
- 'நீர்தவழ் தீயென..' (16)
- 'விண்ணின் நீர்முகில் மின்னென நோக்கல்..' (16)
- 'காவில் ஓடிய முத்தெனக் காதலால் நாவில் ஓடிய நல்புகழ்..' (17)
- 'கோல்விழி..' (17)
- 'சான்எரி தூண்டும் ஓர்சினம்..' (27)
- 'மின்னை ஒன்றிய வேடமெ டுத்தவன்..' (31)
- 'வாளெ ழுந்தகண்..' (34)



www.ikeou.lk

உருவகங்கள்:

- 'பஞ்ச அரங்கு' (2)
- 'இன்ப நெடுங்கடல்' (18)

மடக்கணி:

- மாலை என்னும் சொல் செய்யுளில் வெவ்வேறு பொருளைத் தரும் வகையில் அமைந்துள்ளது. (03)

அந்தாதி அமைப்பு

- செய்யுள் இலக்கம் 15 தொடக்கம் 25 வரை அந்தாதி அமைப்பு உள்ளமை.

(தேம்பாவணி) காட்சிப்படல பகுதியில் வினாவப்படக்கூடிய மாதிரி வினாக்கள்.



1. தேம்பாவணி காட்சிப்படலம் பற்றி விளக்குக.
2. தேம்பாவணி எழுந்த காலப்பின்னனியை துலக்குக.
3. வீரமாமுனிவர் பற்றி சிறுகுறிப்பு வரைக.
4. காட்சிப்படலம் சிறப்பாய் வெளிப்படுத்தி நிற்கும் விடயங்கள் எவை?
5. காட்சிப்படலத்தில் இடையர் வந்து குழந்தையை எவ்வாறெல்லாம் வணங்கியதாக கூறப்படுகின்றது.
6. குழந்தை யேசுவை எவ்வாறெல்லாம் இடையர்கள் போற்றி வாழ்த்தினார்கள்?
7. குழந்தை யேசுவை பிரிந்து சென்ற இடையர்கள் எவ்வாறான துன்பத்தை அடைந்தனர்?
8. காட்சிப்படலத்தில் சாந்தி அடைந்ததாக கூறப்பட்ட ஐயங்கள் எவை?
9. காட்சிப்படலத்தில் சாந்தி அடைந்த ஐயங்களை போக்க அன்னை மரியாள் கூறிய பதில்கள் எவை?
10. இயேசு குழந்தையாக தனித்து பிறந்ததன் சிறப்புக்களாக கூறப்படுபவை எவை?
11. தேம்பாவணி காட்சிப்படலமூடாக வெளிப்படும் இயேசு கிறிஸ்துவின் மகிமைகளைத் தருக.
12. தேம்பாவணி காட்சிப்படல பகுதியினூடாக வெளிப்படும் மரியாளின் பெருமைகளைத் தருக.
13. தேம்பாவணி காட்சிப்படல பகுதியினூடாக வெளிப்படும் சூசையின் பெருமைகளைத் தருக.
14. தேம்பாவணி காட்சிப்படலமூடாக வெளிப்படும் இடையர் பண்புகளையும், சிறப்புகளையும் தருக.
15. தேம்பாவணி காட்சிப்படலத்தில் பயன்பட்டுள்ள அணிகளை உதாராணத்துடன் குறிப்பிட்டு விளக்குக.
16. தேம்பாவணி காட்சிப்படலத்தில் ஆசிரியர் கையாண்டுள்ள மொழிநடைச் சிறப்பம்சங்கள் எவை?

www.ikeu.lk